1980 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) கையாடல் குற்றம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

சிங்கோனா தோட்டத் தொழிலாளர்கள்.

*வினா எண். 44— திரு. கு. ரமணி : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மலையில் உள்ள சின்கோனா தோட்டங்களில் மொத்தமுள்ள தொழிலாளர்கள் எவ்வளவு பேர் ?

(ஆ) அவர்களில் நிரந்தரமாக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ? கேஷுவல் தொழிலாளர்கள் எவ்வளவு பேர் ?

(இ) அவர்கள் யாவருக்கும் பிராவிடண்ட் நிதி பிடிக்கப் படுகிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) நீலகிரியிலுள்ள அரசின் சின்கோனா தோட்டங்களில் 1,472 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள்.

(ஆ) 1,472 தொழிலாளர்களில் 745 பேர் நிரந்தரத் தொழிலாளர்கள். எஞ்சிய 727 பேர் தற்காலிகத் தொழிலாளர்கள்.

(இ) மொத்தமுள்ள 745 நிரந்தரத் தொழிலாளர்களில், 715 பேர் தமிழ்நாடு தொழிலாளர் வைப்பு நிதித் திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளார்கள். ஏனைய தொழிலாளர்களும் 240 நாட்கள் தொடர்ந்து பணியாற்றி இந்த வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் சேருவதற்குத்தகுதி பெறும்போது சேர்க்கப்படுவார்கள்.

திரு. கு. ரமணி : அரசாங்கத்தின் நேரடித் தலைமையில் உள்ள இந்த சின்கோனா தோட்டத் தொழிலாளர்களில், தனியார் தோட்டங்களில் இருக்கிற தொழிலாளர்களைப் போல் கஷ்டப்பட்டு வேலை செய்யக்கூடிய இந்தத் தொழிலாளர்களில் பாதிப்பேர்களுக்கு மேல் 700 பேர்களுக்கு மேல் நிரந்தரமல்லாத தொழிலாளர்களாக வைத்திருப்பது சரிதானா ? ஆகவே, உடனடியாக அவர்களில், 240 நாட்கள் சர்வீஸானவர்களை நிரந்தரமாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். விரப்பன்: 240 நாட்கள் தொடர்ந்து பணியாற்றியிருப்பார்களேயானால் அவர்களை நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு பரிசீலிக்கும்.

1980 பிப்ரவரி 5]

திரு. கு. ரமணி : அரசாங்கம் இந்த விஷயத்தை எவ்வளவு காலத்திற்குள் முடிக்க முடியும்? ஏற்கெனவே பல வருடங்களாக சர்வீஸ் ஆனவர்கள்—சின்கோனா டைரக்டரிடமிருந்து ஒரு ரிப்போர்ட் கிடைத்தால் அரசு நிரந்தரமாக்க முடியும். லேபர் டிபார்ட்மென்ட்டிலிருந்தே 240 நாட்கள் சர்வீஸானவர்களுக்கு நிரந்தரத் தொழிலாளர்களுக்கு உள்ளது போன்ற சலுகைகள் கொடுப்பதுபோல், இவர்களுக்குப் பூர்ணமாகக் கொடுப்பதுடன், எவ்வளவு காலத்திற்குள் இவர்களை நிரந்தரமாக்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : 1975 ஆம் ஆண்டு ஒரு அரசாணைப்படி நிரந்தரமாக தொழிலாளர்களை நியமிப்பது வேண்டாம் என்று தடுக்கப்பட்டிருக்கிறது. அது என்ன காரணத்தால் என்று தெரியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையின்படி மிக விரைவில் அதற்குத் தகுதியானவர்களை நிரந்தரமாக்குவதற்கு வேண்டிய முயற்சிகளில் அரசு ஈடுபடும்..

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, அந்தத் தொழிலாளிகளுக்கு அங்கே அநேக நாட்கள் வேலை கொடுப்பதற்கு வேலை இருந்தும், வேலை கொடுத்தால் அவர்களை நிரந்தரமாக்குகின்ற சூழ் நிலை உருவாகும் என்று வேலை கொடுப்பதில்லை அங்கு கூலிக்கு வேலை செய்கின்ற மக்கள் சொல்கிறார்கள். இது உண்மையா ? உண்மையானால், அதை நீக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரமாக்க வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்படுமே என்ற காரணத்தைக் காட்டி, நிச்சயமாக வேலை மறுக்கின்ற நிலைமையை இந்த அரசு அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சின்கோனா பிரிவு அதிகமான வருவாயைத் தருகின்ற, அந்நிய செலவாணியை ஈட்டித் தருகின்ற காரணத்தினால், மேலும் ஊக்கம் அளிக்கின்ற வகையில் தனியாக அதற்கு ஒரு '' சின்கோனா வாரியம் '' அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது அதிகமான வருவாயை அரசுக்கு ஈட்டித் தரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏதோ வருவாய் வருகின்றது. அதிலும் கடந்த 3 ஆண்டுகளாக மத்திய அரசு விலையை நிர்ணயிக்கின்ற காரணத்தினால், வருவாய் குறைந்து வந்திருக்கின்றது

1980 பிப்ரவரி 5]

ஆனால், இது வருவாயின் அடிப்படையில் நடத்துகின்ற தொழில் அல்ல. இது நாட்டு மக்களுக்கு மிகவும் தேவையான மருந்தைத் தயாரிக்கின்ற அடிப்படையில் அமைந்திருக்கின்ற காரணத்தினால், இதற்காக அரசு ஒரு தனியான துறையை அமைத்து நடத்திக் கொண்டு வருகின்றது. வாரியம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

*வினா எண். 45—திரு. கு. ரமணி ; மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மலையில் சின்கோனாத் தொழிலாளர்களுக்கு மோயார் டிவிஷனில் 1977 டிசம்பரில் புதிய வீடுகள் கட்ட ஆரம்பித்தது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இதுவரை எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன ?

(இ) சின்கோனா தோட்ட டிவிஷன்களில் உள்ள தொழிலாளர் வீடுகளுக்கு மின் விளக்குகள் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) 1977 ஆம் ஆண்டில் இருபது வீடுகள் கட்டும் வேலை எடுத்துக் கொண்டதில், 10 வீடுகள் கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளன.

(இ) இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, சின்கோனா பகுதியிலே மோயார் டிவிஷன் மிகவும் நல்லதொரு நிலைமையில் இல்லாமல், கஷ்டமான பாறைகள் மிகுந்த இடமாக அமைந்திருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அங்கே பெருவாரியான தொழிலாளர்களுக்கு வீடுகள் கிடையாது. அங்கே ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் வீடுகள் கட்ட முடியாமல் இருக்கின்றது. அதற்கான தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படாமல், 1977லிருந்து 1980 வரைக்கும் மிகவும் குறைந்த எண்ணிக்கையான வீடுகளே அங்கே கட்டப்பட்டிருக்கின்றன என்பதை கணக்கில் கொண்டு, இதைத் துரிதப்படுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு முடிய சுமார் 400 வீடுகள் கட்ட வேண்டுமென்று திட்டமிட்டு, காரியங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.